25th September 1958]

Part-time Lecturers of the Law College

* 548 *Q.*—Sri A. V. P. ASAITHAMBI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சட்டக் கல்லூரியில் பகுதி நேரம் வேலே பார்ப்பவர்கள்கூட அரசியலில் ஈடுபடுபவர்களாக இருக்கக்கூடாது என்று விதி ஏதேனும் திருத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) அப்படி திருத்தப்பட்டிருப்பின் அதற்குரிய காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. Certain provisions of the Government Servants' Conduct Rules (relating to connection with press, publication of documents and communications to the press in the name of Government servants and public speeches, evidence before Committees, taking part in politics and elections and discussion of the policy or action of Government) which were not applicable to part time Government officials have been made applicable to them.

(*b*) The intention is to maintain uniformity in respect of all categories of Government servants in the matter of disciplinary control.

Sri A. V. P. ASAITHAMBI : சட்டக் கல்லூரி தோன்றிய காலத்திலிருந்து பகுதிநேர வேலே பார்ப்பவர்கள் மீதி நேரங்களில் அரசியலில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும் பாவாயில்லே என்ற நிலேமை இருந்து வந்ததுண்டா ? பிரிட்டிஷார் காலத்தில் இப்பொழுது ஜனாதிபதியாக இருக்கும் ராஜேந்திர பிரசாத் அவர்கள் முதற்கொண்டு பகுதிநேர வேலே செய்துகொண்டு மீதி நேரங்களில் அரசியலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? (Mr. Speaker : இரண்டு கேள்வி ஆகிவிட்டன.) அப்படியிருக்கும்பொழுது சுதந்திர சர்க்கார் பகுதி நேர வேலே பார்ப்பவர்களே அரசியலில் ஈடுபட அனுமதிக்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருப்பது சரியல்ல. எனவே, அந்த விதி திருத்தப்படுமா ?

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் ஒரு கேள்விதான் கேட்க வேண்டும். 1, 2, 3 கேள்விகளே கேட்டுக்கொண்டே போவது சரியல்ல.

The Hon. Sri C. SUBRAMANIAM : இம்மாதிரி சர்க்கார் உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுபவர்கள் ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் வைத்துக்கொண்டிருப்பது நல்லது அல்ல என்று சுதந்திர இந்தியாவிலே சுதந்திர சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. அதை அமுல் நடத்தவும் செய்யப்போகிறேம்.

Special additional pay to teachers

* 519 *Q.*—Sri A. GOVINDASAMY : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் தனிக்கூட்டுச் சம்பளம் ரூ. 5-ல் மத்திய அரசாங்கம் சென்னே அரசாங்கத்திற்குக் கொடுக்கும் உதவித் தொகை எவ்வளவு ?

The Hon. Sri C. SUBRAMANIAM : 50 per cent of the total expenditure on the payment of the special additional pay to teachers is being met by Government of India.

Sri A. GOVINDASAMY : ஆசிரியகளுக்கு கொடுக்கிற தனிக்கூட்டு சம்பளத்தை அடிப்படை சம்பளத்தோடு சேர்த்துக் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அதைச் செய்வார்களா ?